முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஊடகவியாளர் தமிழ்கேள்வி செந்தில்வேல், முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் உரையாற்றினார்கள். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, நகரச் செயலாளர்கள் ஜெ. சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், கே.பி.ராஜன், த.வினோத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகரம் 26 வது வட்ட கழக செயலாளர் மறைந்த பிரபுவேல் திருவுருவப்படத்தை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஆவடி மாநகர மேயர் உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர் ஜி. ராஜேந்திரன் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தி.மு.க. மாணவர் அணி சார்பில் ஜூன் 23- சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள்!

செஞ்சி ஜூன் 21-

திமுக மாணவரணி சார்பில் சென்னையில் 23ஆம் தேதி நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி நிர்வாகிகள் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கையில் கூறுகையில்:

.திமுக தலைவர்மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர்உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன் தமிழ்நாட்டின் கல்வி உரிமை பறிக்கும் ஒன்றிய பாஜக அரசின் PM Shriதிட்டம், CBSEபள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பில் மாணவர்களுக்கு மும்மொழி திணிப்பை கண்டித்தும், உயர்கல்வி துறையை முடக்கும் விக்சித் பாரத் சிக்க்ஷா அதிஷ்தான் (VBSA உயர்கல்விக்கான ஒரே ஆணையம்)மசோதாவை திரும்ப பெற கோரியும், திமுக மாணவரணி சார்பில் எதிர்வரும் ஜூன் 23ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு சென்னை சைதாப்பேட்டை கலைஞர் வளைவு அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு மாணவர்களின் கல்வி உரிமையையும் நமது மாநிலத்தின் இறையாண்மையையும் காக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். எனவே விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்மாணவரணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்களை பெரும் திரளாக பங்கேற்க செய்து அனைவரும் கருப்பு சட்டை அணிந்து கையில் கருப்பு சிவப்பு இரு வண்ண கழக கொடியை ஏந்தி பெரும் திரளாக திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்யவேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வழக்கறிஞர் பி. வின்சென்ட் தலைமையில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்500 பேருக்கு அறுசுவை உணவு - மகளிர்க்கு நல உதவிகள்!

மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை ஜூன் 21-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம் 61வது வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி. வின்சென்ட் தலைமையில் 500 பேருக்கு அறுசுவை உணவும், 300 மகளிர்க்கு புடவையும் வழங்கப்படுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (21.6.2026-ஞாயிறு கிழமை) மதியம் 12 மணியளவில் வீராசாமி தெரு எழும்பூரில் 500 பேருக்கு அறுசுவை விருந்து மற்றும் 300 மகளிர்க்கு புடவை வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு 61வது வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.வின்சென்ட் தலைமை வகிக்கிறார்.

விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு 500 பேருக்கு அறுசுவை உணவு மகளிர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இதில் மேயர் பிரியா ராஜன், விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், வட்டக் கழக செயலாளர் டால்பின் எஸ்.ஹரி,

தெற்கு,வடக்கு பகுதி நிர்வாகிகள்; எஸ். ரசூல்,டி.வி.வேலு, எம். மலர்தாறன்,கே. அன்னபூரணி,எஸ். ஜெகதீசன்,பா. கௌதம்,ஆர்.குமார், சி. பூங்கொடி,சி. சீனிவாசன், எம். ராமச்சந்திரன்,டி. இசக்கியல், இன்பநாதன், வி. பார்த்திபன்,ஜே. இஸ்மாயில்,வி.ஆர். சாந்தகுமார், எம்.இராமச்சந்திரன், எஸ்.கே. செந்தில்குமார், வி.ராஜேஷ், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் எல். எட்வின் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் பாக முகவர்கள் கலந்து கொள்கின்றனர்.

மயிலை கிழக்குப் பகுதி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - நல உதவிகள்!

மயிலை த.வேலு முன்னிலை! எஸ்.முரளி அறிக்கை!

சென்னை, ஜூன் 20-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி திமுக சார்பில் இன்று 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ். முரளி ஆகியோர் முன்னிலையில் கழக கொடி ஏற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்குகிறார்கள்.

நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் :

1.மயிலை கிழக்குப் பகுதி சுற்றுச்சூழல் அணி சார்பில் பகுதி அமைப்பாளர் எஸ்.ஜீவரத்தினம் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வள்ளீஸ்வரன் தோட்டத்தில் காலை 10 மணி அளவில் வழக்குகிறார்.

2.மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.கதிரவன் ஏற்பாட்டில் வல்லீஸ்வரன் தோட்டம் தமிழ்நாடு நகர் புற வாழ்விட குடியிருப்பில் காலை 11:30 மணியளவில் வழங்குகிறார்.

3.மயிலை கிழக்கு பகுதி 125 வது வட்ட துணைச் செயலாளர் சி.இ. மதிவாணன் ஏற்பாட்டில் 300 பேருக்கு அம்பேத்கர் பாலம் அருகில் மதியம் 12 மணியளவில் வழங்குகிறார்.

4.மயிலை கிழக்கு பகுதி 171 வது வட்ட பொருளாளர் ஆர்.சிவன் ஏற்பாட்டில் ஆந்திர மகிளா சபாவில் மாணவர்களுக்கு மதியம் 12.30 மணி அளவில் மதிய உணவு வழங்குகிறார்.

ஆகவே மயிலை கிழக்கு பகுதியைச் சார்ந்த சார்ந்த மாநில, மாவட்ட,பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளரகள் கழக நிர் வாகிகள், மாவட்ட பிரதி நிதிகள், அனைத்து அணிக ளின் மாவட்ட அமைப்பா ளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2,BDO, BLC நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மயிலை ஆர்.சிவன் தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

மயிலை கிழக்குப் பகுதி 171வது வட்டத்தில் அறுசுவை உணவு!

மயிலை த.வேலு வழங்குகிறார்! எஸ். முரளி – துரை பார்த்திபன் – கீதா முரளி பங்கேற்பு!

சென்னை, ஜூன் 21

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 171வது வட்ட தி.மு.க சார்பில் காலத்தை வென்ற கழகச்சூரியன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் விழா அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி 171வது வட்ட பொருளாளர் மயிலை ஆர்.சிவன் தலைமையில் இன்று (21.06.2026 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12.30 மணியளவில், ஆந்திரா மகிளா சபா ஆர்.ஏ.புரம், சென்னை28-ல் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, 171வது வட்ட செயலாளர் துரைபார்த்திபன், 171வது மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி, 124வது வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு, த. வேல்முருகன், எம்.ஜீவ ரத்தினம், அ.ஜான்பிரிட்டோ, மா.பா.தாமு, எம்.பாஸ்கர், ஆர்.சந்தோஷ்குமார், என். குருமூர்த்தி, வி.முருகன், வி.ஹரிஸ், P.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி பிரதிநிதி மயிலை R.S.மனோகரன், பகுதி பிரதிந்தி லயன் K.காசிபாண்டியன் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வேலுசாமி பந்தம், P.L.தாஸ், மயிலை ஆர்.பாலு, எஸ்.சரவணன், சி.கணேஷ்பாண்டியன், ஆர். கதிரவன், M.S.T. மணிமாறன், பி.இராமகிருஷ்ணன், ஜெ. அசோக்குமார், கலைச்செல்வி, டி.ஜெகதீஷ்பாபு, பிரவின்பாபு, வி. கார்த்திக், இரா.நாகலிங்கம், மயிலை கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: DR. ஆர்.ரமேஷ் மயிலை தென்றல் வி.விஜய், சா.ராஜீ, மூ. உதயசூரியன், ஸ்டோன் வீ. அருண்குமார், என்.வி.லோகநாதன், ம.ஜெயக்கோபி, தா.வின்சென்ட், டி.மோகன் ராஜ், ஆர்.கலைசேகரன், 171வது வட்ட கழக முன்னோடிகள் மா.பால கிருஷ்ணன், எம்.எஸ்.திருநாவுக்கரசு, கலைஞர் கருணாநிதி நற்பணிமன்றம் வள்ளீஸ்வரர் தோட்டம் எம்.பாரத், என்.பாலவிக்னேஷ், ஆர். சாம்ராஜ், ஜி.சூர்யா, பி.பிரித்விராஜ், கே.நவீன்குமார், எம்.சுரேஷ் மற்றும் கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொள்கின்றனர். ஸ்டார் V.குமார், பஞ்சர் கு.முருகன், சாஸ்தா S.குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

ஆயிரம் விளக்கு 113 'அ' வட்டக் கழகச் செயலாளர்

த.தேவராஜ் சகோதரர் த.யோகராஜ் மறைவு!

நே.சிற்றரசு – அன்பகம் கலை – பூச்சி முருகன் – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன் 21

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 113 வது அ வட்ட கழக செயலாளர் த. தேவராஜ் அவர்களின் உடன் பிறந்த சகோதரர் த.யோகாராஜ் அவர்கள் உடல் நலமின்றி நேற்று (20.06.2026) காலை இயற்கை எய்தினார் என்பதை தெரிவிக்க வருந்துகிறோம். செய்தி அறிந்து சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு, கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ் முருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, பகுதி கழக செயலாளர் மா. பா. அன்புதுரை, கே. ஏழுமலை, எஸ். எம்.கே. அண்ணாதுரை, நுங்கை வி.எஸ். ராஜ், ராஜா அன்பழகன், பா. பிரகாஷ், சி. பாட்ஷா பாபு, என். மோகன் வேல், துபாய் வி.ஆர். விஜய், எம். செந்தில் குமார், வட்ட கழக செயலாளர்கள் கோ.யுவராஜ், தேனா எல். தவமணி, எஸ்.என்.கே. ராமன், சத்திய பெருமாள், எம். என். விஷ்ணு, ஆர்.பாபு, எஃப் பீட்டர் ஜான் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் ஆர். செல்வம், எஸ். ஆர். எஸ்.கே. சங்கர், கே. முருகன், ஜி.எம். சரவணன், ஜி.ராமு, சீனு, தினேஷ், பன்னீர், வெங்கட், சந்தோஷ் உள்ளிட்டோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் உடல் 20.06.2026, மாலை 5 மணி அளவில் பிள்ளையார் கோவில் தெரு இல்லத்தில் புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது

மாதவரம் வடக்கு பகுதி

23 'அ' வட்ட கழக முன்னோடி என்.கிரி மறைவு!

புழல் எம். நாராயணன், வி.ஆர்.குப்பன் – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூன் 21-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்ட கழக முன்னோடி என். கிரி வயது 54 அவர்கள் இயற்கை எய்தினார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டம் காவாங்கரை பகுதியில் வசித்து வரும் கழகத்தின் மூத்த முன்னோடிகள் என். சம்பத்குமார்,என். ராஜேந்திரன், என். சுதாகர் ஆகியோரின் சகோதரரும், கழகத்தின் மூத்த முன்னோடியுமான என் .கிரி வயது 54 என்பவர் நேற்று இயற்கை எய்தினார் என்கிற செய்தி அறிந்து மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், வட்ட செயலாளர் வி. ஆர். குப்பன், வட்ட நிர்வாகிகள் வி.ஹரி, பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சாந்தகுமார், முன்னாள் கவுன்சிலர் பாஸ்கர் மற்றும் நிர்வாகிகள் நேரில் சென்று மறைந்த கிரி அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும் கிரி அவர்களை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டால் மக்கள் அவதி!

ஈரோடு, ஜூன். 21–

ஈரோடு மாவட்டத்தில் 100 டிகிரிக்கு மேல் கோடை வெயிலில் கொளுத்தி எடுக்கும் நிலையில் அறிவிக்கப்படாத மின்வெட்டால் தவிக்கும் மக்கள் மின்வெட்டு கணக்கீடு செய்வதில் தாமதத்தால் மின் கட்டணம் தாறுமாறாக எகிறியதால் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளனர்.

த.வெ.க. தேர்தல் வாக்குறுதியில் பொதுமக்களை குறிப்பாக இல்லத்தரசிகளை மகிழ்விக்கும் வகையில் 200 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படும் என முதலமைச்சர் விஜய் தேர்தல் களத்தில் பொதுமக்களிடம் வாக்குறுதி அளித்தார் இதனை நம்பி பலரும் தங்கள் வாக்குகளை தவெகவிற்கு பதிவு செய்து விஜயை முதலமைச்சராக பதவியில் அமர வைத்தனர். ஆனால் மக்கள் அறிவிக்கப்படாத மின்வெட்டால் இரவு நேரங்களில் தூங்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு கொண்டிருக்கின்றனர் மேலும் அதிகப்படியான மின்கட்டணம் பொதுமக்களுக்கு பேரிடையாக அமைந்துள்ளது.

வீடுகளில் இருந்து பணிபுரியும் தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள் உள்ளிட்டோர் பெரிதும் பாதிக்கபடுகின்றனர் அறிவிக்கப்படாத மின் வெட்டு குறித்து துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது அப்போது மின்தடை விவகாரத்திற்கு ஒரு சில இடங்களில் தனி நபர்களின் தவறுகளாலும் திட்டமிட்டு சதி செயல்களாலும் மின் வெட்டு ஏற்பட்டுள்ளது தவறு செய்யும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்வெட்டுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மின்சாரத் துறை அமைச்சர் சி.டி.ஆர் நிர்மல் குமார் தெரிவித்தார். மின்வெட்டில் இருந்து பொதுமக்கள் மீள்வதற்கு முன்பே அடுத்த பேரிடையாக இரண்டு மாதங்களுக்கு மின்சார கட்டணம் ரூ.800 முதல் 1500 வரை செலுத்தி வந்தவர்களுக்கு மாதம் ரூ.4500 லிருந்து ரூ.5000 ரூ.6000 என மின்சார கட்டணம் தாறுமாறாக உயர்ந்துள்ளது பொதுமக்களை பெரிதும் கவலை கொள்ள வைத்துள்ளது.

இது குறித்து ஈரோடு மாவட்ட பொதுமக்கள் கூறியது

ஈரோடு வீரப்பன் சத்திரம் பகுதி செல்வம் கூறியது. எனக்கு தறி தொழில் மட்டுமே தெரியும் ஏற்கனவே பல்வேறு காரணங்களால் விசைத்தறிகள் குறைவாக உள்ளது அறிவிக்கப்படாத மின்வெட்டால் தறி ஓட்ட முடிவதில்லை இதனால்

வாழ்வாதாரம் பாதிக்கபடுவது. திமுக ஆட்சியில் மின்வெட்டு இல்லை. இப்போது நினைத்த நேரத்துல கரண்ட் போகுது.

சித்தோடு பகுதியை சேர்ந்த ராஜேஷ் கூறியது கடந்த முறை எனது வீட்டுக்கு மின் கட்டணம் ரூ.2800 வந்தது ஆனால் இந்த மாதம் இரண்டு மடங்கு கூடுதலாக வந்துள்ளது அதாவது இந்த மாதம் மின் கட்டணம் 6000 வந்துள்ளது. எங்க எங்கள் வீட்டில் 3 டியூப் லைட் 2 மின்விசிறிகள் மற்றும் குளிர்சாதன பெட்டி 1, மிக்ஸி1 கிரைண்டர் 1 உள்ளது. இதற்கு எப்படி இவ்வளவு மின் கட்டணம் வந்தது என்றே தெரியவில்லை இது குறித்து கேட்டால் மின்வாரியத்திடம் இருந்து உரிய பதில் ஏதுமில்லை மேலும் எவ்வளவு பயன்படுத்துவது அதற்கு எவ்வளவு கட்டணம் என்று விவரம் எதுவும் மின் கட்டண அட்டைமில் எழுத வில்லை சரியான நேரத்தில் மின்கணக்கீடு செய்தார்களா என்றும் தெரியவில்லை. மீட்டர் பெட்டியில் பழுது ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கக் கூறி இரண்டு மாதங்கள் ஆகியும் பார்க்க வில்லை எங்களைப் போன்ற நடுத்தர குடும்பத்தினருக்கு மிகவும் சிரமமாக உள்ளது இப்படிப்பட்ட சூழ்நிலையில் மின் கட்டண உயர்வு என்பது எங்களுக்கு மிகவும் பேரிடியாக உள்ளது. திமுக ஆட்சியில் முறையான கணக்கீடு, சரியான கட்டண முறை இருந்தது.

நான் பவானி பகுதியைச் சேர்ந்த இன்ஜினியர் வேல்முருகன் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் மின்விசிறி, ஏசி பயன்பாடு அதிகமாக உள்ளது. குறிப்பிட்ட யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தினால் அதிக கட்டணம் வசூலிப்பது போன்ற முறைகளால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் எனவே மானியமோ இலவசமோ இல்லாமல் பயன்படுத்திய மின்சாரத்துக்கு மட்டும் கட்டணம் வசூல் முறையை பின்பற்றினால் அனைத்து தரப்பினருக்கும் பயனுள்ளதாக இருக்கும் எனது வீட்டிற்கு கடந்த முறை ரு 4000 மின்கட்டணம் வந்தது ஆனால் தற்போது 7000 வந்துள்ளது. என்னை போன்றே எங்கள் பகுதியைச் சேர்ந்த பல ருக்கு மின் கட்டணம் உயர்வு உள்ளது இது எங்கள் அனைவருக்கும் கடும் அதிர்ச்சியாக உள்ளது பலர் மின்கட்டணம் செலுத்த முடியாமல் விழி பிதுங்கி இருக்கிறார்கள் எனவே மின் கணக்கீட்டை மீண்டும் நடத்தி மின்கட்டணத்தை குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். திமுக ஆட்சியில் இப்படிப்பட்ட குளறுபடிகள் இன்றி தெளிவான மின்கணக்கீடு மின்கட்டணம் இருந்தது.

நான் கோபி பகுதியைச் சேர்ந்த தமிழரசி புதிய அரசு பொறுப்பேற்றதும் ஒவ்வொரு வீட்டுக்கும் 200 யூனிட் மின்சாரம் இலவசம் என அறிவிக்கப்பட்டது எங்கள் வீட்டில் 200 யூனிட்டுக்கும் குறைவாக தான் மின்சாரம் பயன்பாடு இருக்கும் இதன் காரணமாக எப்போதாவது தான் மின் கட்டணம் வரும் ஆனால் இந்த மாதம் 284 மின்கட்டணம் வந்துள்ளது. இதைக் கண்டதும் எங்களுக்கு அதிர்ச்சியாக உள்ளது. ஏசி, குளிர்சாதன பெட்டி, கிரைண்டர் போன்ற மின்சாதன பொருட்கள் ஏதும் இல்லாத நிலையில் எப்படி இந்த கட்டணம் வந்தது என்று தெரியவில்லை அரசு இலவச திட்டங்களை கொண்டு வந்தாலும் அதனை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலைதான் தற்போது உள்ளது எனவே மின்சார வாரியம் வெளிப்படை தன்மையுடன் செயல்பட புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த திமுக ஆட்சியில் சொல்வது வேறு செய்வது வேறு என்று இல்லாமல் தேர்தல் அறிக்கையில் சொன்னது செய்தார்கள்

நான் சக்தி பகுதியைச் சேர்ந்த இல்லத்தரசி சக்தி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்தடை தினந்தோறும் நடைபெறுகிறது இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர் கோடை காலத்தில் மின்சாரம் இல்லாமல்கடுமையாக அவதிப்படுகிறோம் மேலும் சமையல் செய்வதிலும் சிரமம் ஏற்படுகிறது தற்போது மின்சார கணக்கு எடுப்பதற்கு காலம் தாழ்த்தப்படுகிறது இதன் காரணமாக மின் கட்டணம் தாறுமாறாக உயர்ந்து வருகிறது இதனால் ஏழை, நடுத்தர மக்கள் மின் கட்டணம் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது எனவே உரிய நேரத்தில் மின்கட்டணம் கணக்கெடுப்பு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் மேலும் அடிக்கடி மின்தடை ஏற்படுவதை தடுக்க வேண்டும். திமுக ஆட்சியில் பாடுபட்டு வந்தவர்கள் இரவில் நிம்மதியாக தூங்கினார்கள். இப்போது தொழில் டாதிப்பு, தூங்க முடியாத நிலை, மின்கட்டண உயர்வு என மக்கள் அவதிபடுகிறோம்.

திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா.தேசபந்து மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஜூன்-21.

திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா.தேசபந்து அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த வீரா.தேசபந்து அவர்கள் மன்னார்குடி ஒன்றியம் முக்குளம்சாத்தனூர் ஊராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவராகவும், தி.மு.க. விவசாய அணி திருவாரூர் மாவட்ட அமைப்பாளருமாக தொடர்ந்து இரண்டுமுறை இருந்து கழகப்பணி ஆற்றியவர் ஆவார்.

வீரா.தேசபந்து அவர்களின் மறைவின் தகவல் அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், விவசாய தொழிலாளர் அணி மாநில தலைவர் உ.மதிவாணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு இரங்கலை தெரிவித்தனர்.

திருவாரூர் மாவட்ட திமுக சார்பில் மறைந்த வீரா.தேசபந்து அவர்களுக்கு மாவட்ட

செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற இரங்கல் ஊர்வலம் நடைபெற்றது.